# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 4/2025

## Deposition of P.W. 4

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. S.V. Raveendran** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **13.08.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba]

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வனக்கோட்டம், வத்ராயிருப்பு வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது பூதப்பாண்டி வனச்சரக அலுவலராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 29.12.2022 மாலை சுமார் 04.30 மணியளவில் கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம், பூதப்பாண்டி வனச்சரகம், பணகுடி பிரிவு,

சிவகாமிபுரம் பீட், உப்பு ஓடை குட்டிக்குளம் அருகில் வனவிலங்கு வேட்டையாடுவதாக மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் திரு. சிவக்குமார் உதவி வனபாதுகாவலர் மற்றும் உதவி இயக்குநர், கன்னியாகுமரி வனக்கோட்டம் அவர்கள் தலைமையில் நான் மற்றும் பணகுடி பிரிவு வனவர் திரு. எம். மணிகண்டன், வனக்காப்பாளர் திரு. பி. சங்கரபாண்டி, ரோஸ்மியாபுரம் பீட் (சிவகாமிபுரம் பீட் கூடுதல் பொறுப்பு) மற்றும் வேட்டைத்தடுப்பு காவலர்கள் அடங்கிய குழுவாக உப்பு ஓடை தென்பகுதியில் உ ள்ள குட்டிக்குளம் அருகில் சென்று சோதனை செய்தபோது 1ம் குற்ற எதிரி இசைக்குமார், வயது 24, த/பெ- கிருஷ்ணன், காந்தி மேலத்தெரு, சிவகாமிபுரம், பணகுடி, 2ம் குற்ற எதிரி ஆதிகேசவன், வயது 16, த/பெ. வேம்படி முத்து, சிவகாமிபுரம், பணகுடி, 3ம் குற்ற எதிரி சுனில், வய து21, த/பெ. தர்மராஜ் பால்பாண்டி, காந்தி, வடக்கு தெரு, பணகுடி ஆகிய 3 குற்றஎதிரிகள் சம்பவ இடத்தில் நின்றுகொண்டிருந்தனர். 1ம் குற்ற எதிரி இசைக்குமார் எங்களை கண்டதும் தப்பி ஓடிவிட்டார். பிடிபட்டகுற்ற 2ம் குற்ற எதிரி ஆதிகேசவன் மற்றும் 3ம் குற்ற எதிரி சுனில் ஆகியோரை விசாரணை செய்தபோது குற்ற எதிரிகள் 3 நபர்களும் நண்பர்கள் என்பதும், 3 குற்ற எதிரிகளும் சேர்ந்து பனைமரம் ஏறுவதற்கு சென்றபோது குட்டிக்குளம் அருகில் உடும்பு (Monitor Lizard) ஒன்று ஓடியதாகவும், அதை 1ம் குற்ற

எதிரி இசைக்குமார் பிடித்ததாகவும், அதனை வேட்டையாடி கத்தியால் தோல் உரித்து வெட்டி துண்டுகளாக்கி வைத்ததாகவும், அதனை சமைத்து சாப்பிடலாம் என்று நினைத்ததாகவும் கூறினர். இதன் அடிப்படையில் சம்பவ இடத்தில் வைத்து சிவகாமிபுரம் பீட் கூடுதல் பொறுப்பு வனக்காப்பாளர் திரு. சங்கரபாண்டி அவர்களால் எச்.நமூனா எண். 039181, நாள். 29.12.2022, ஸ்தல மகசர், 2 மற்றும் 3 ம் குற்ற எதிரிகளிடம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வனக்குற்ற அறிக்கை ஆகியவை என் முன்னால் பதிவுசெய்யப்பட்டது. எதிரிகளின் இச்செயல் அட்டவணை 1ல் வகைப்படுத்தப்பட்ட உடும்பினை (Monitor Lizard) வேட்டையாடிய குற்றச்செயல் 1972 ம் ஆண்டு வருட வன உயிரின பாதுகாப்புச்சட்டம் அட்டவணை 1, பிரிவு 9, 39, 49 பி, 50, 51 மற்றும் 57 ன்படி தண்டனைக்குரிய குற்றமாகும். அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட குற்ற எதிரிகள் மீது வனவழக்கு WLOR.No. 20/2022 பதியப்பட்டது. பிடிபொருட்களான உடும்பு இறைச்சி, தலை மற்றும் தோல் சுமார் 1.5 கிலோ, அலுமினிய சட்டி 1, சில்வர் கரண்டி 1, கத்தி 1 ஆகியவை கைப்பற்றப்பட்டு படிவம் 95 சம்பவ இடத்தில் வைத்து என்னால் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் அலுமினிய சட்டி, ஸ்டீல் கரண்டி மற்றும் கத்தி தான் எதிரிகள் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகும். இந்த மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம் வனவழக்குகள் முன்பு குற்ற எதிரிகளை ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவுப்படி

சிறைக்காவலில் அடைக்கப்பட்டனர். பின்னர் பிடிபொருட்களுக்கு R.P. No. 13/2022, தேதி 30.12.2022 அன்று பெறப்பட்டது. 1ம் குற்ற எதிரி தலைமறைவாகிவிட்டதால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற இயலவில்லை. படிவம் 95ல் உள்ள உடும்பு இறைச்சியினை நீதிமன்ற உத்தரவுப்படி 30.12.2022 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் பணகுடிபிரிவு வனவர் திரு.மணிகண்டன் முன்னிலையில் மாவட்ட வன அலுவலக வளாகத்தில்வைத்து அழிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 2ம் குற்ற எதிரி ஆதிகேசவன் இளவர் என்பதால் அதற்கான அ-படிவத்தை உரிய நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பேன். அரசு தரப்பு சாட்சிகளை விசாரித்ததன் அடிப்படையிலும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் 2 மற்றும் 3ம் குற்ற எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையிலும் இந்த வழக்கு அ-படிவம் தாக்கல் செய்ய உகந்ததாக இருந்ததால், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் அ-படிவத்துடன் மாவட்ட வனஅலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவரின் பரிந்துரையின்படி சி-படிவத்துடன் இணைத்து அ-படிவத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஸ்தல மகசர், 2 மற்றும் 3ம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், ஆகியவை என் முன்னால் தயார் செய்யப்பட்டு நான் அதில் கையொப்பம் செய்துள்ளேன்.1வது எதிரி இசைக்குமார் முன்ஜாமீன் பெற்றதால் அவரைகைது

செய்ய இயலவில்லை. பின்பு நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளார். (**படிவம் 95 அ.சா.ஆ. 5 ஆகவும், சி-படிவம் அ.சா.ஆ. 6 ஆகவும், புகைப்படங்கள் எண்ணிக்கை 2 அ.சா.ஆ. 7 ஆகவும், அலுமினிய சட்டி ஒன்று சா.பொ. 1 ஆகவும், ஸ்டீல் கரண்டி ஒன்று சா.பொ. 2 ஆகவும், கத்தி ஒன்று சா.பொ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).